14023

AL/2019/22/T-I (NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

22 T I

28.08.2019 / 1300 – 1610

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ................................

**அறிவுறுத்தல்கள் :**

* இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டது. பகுதி **I, 40** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி **I** இற்கான விடைகள் **இவ்வினாத்தாளிலேயே** எழுதப்பட வேண்டும்.
* பகுதி **I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வீதம் உரித்தாகும்.
* பகுதி **II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
* பகுதி **III** இல் **நான்கு** வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து விடையளித்தல் வேண்டும்.
* பகுதி **I**, பகுதி **II**, பகுதி **III**, ஆகியவற்றுக்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| | வினா இல | புள்ளிகள் |
|---|---|---|
| பகுதி I | 1 - 40 | |
| பகுதி II | 1 | |
| | 2 | |
| பகுதி III | 3 | |
| | 4 | |
| | 5 | |
| | 6 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| 1 ஆவது பரீட்சகர். | | |
| 2 ஆவது பரீட்சகர். | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |
| எண்கணித பரிசோதகர் | | |

## பகுதி I

● ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைத் தெரிவுசெய்து, அதற்குரிய **இலக்கத்தினை** எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டில்** எழுதுக.

1. பின்வருவனவற்றுள் இடவிளக்கப் படமொன்றின் சமவுயரக்கோடுகளைப் பற்றிய சரியான கூற்று யாது?
   (1) நிலத்தின் பௌதிக அம்சங்கள் யாவற்றையும் சமவுயரக்கோடுகள் எடுத்துக்காட்டுகின்றன.
   (2) சமவுயரக்கோடுகள் 40 m இடைவெளிகளில் வரையப்படுகின்றன.
   (3) சமவுயரக்கோடுகள் எப்பொழுதும் புள்ளிக்கோடுகளினால் காட்டப்படுகின்றன.
   (4) சமவுயரக் கோடுகள் நிலத்தில் சமமான உயரங்களை இணைத்துக் காட்டுகின்றன.
   (5) சமவுயரக் கோடுகள் நேர் கோடுகளாக வரையப்பட்டுள்ளன. (……)

[பக். 2 ஐப் பார்க்க

tamilguru.lk

**2.** இலங்கையின் 1 : 50, 000 இடவிளக்கப் படத்தாளின் பட முகப்பின் நீளமும் அகலமும்,
(1) 40 cm × 25 cm (2) 50 cm × 30 cm (3) 60 cm × 40 cm
(4) 70 cm × 40 cm (5) 80 cm × 50 cm (……)

**3.** ஆய்வொன்றில் பயன்படுத்தப்படும் பிரதான தரவு வகைகள் இரண்டு,
(1) படங்கள், விமான ஒளிப்படங்கள் என்பனவாகும்.
(2) தொகைமதிப்பு அறிக்கைகள், செய்திப் பத்திரிகைகள் என்பனவாகும்.
(3) முதன் நிலை, இரண்டாம் நிலைத் தரவுகள் என்பனவாகும்.
(4) வெளிக்கள அளவீடுகள், அளவீடுகள் என்பனவாகும்.
(5) அவதானிப்புக்கள், கலந்துரையாடல்கள் என்பனவாகும். (……)

**4.** அவதானிப்பு மூலம் சேகரிக்கப்படும் தரவுகளுக்கு ஓர் உதாரணம்,
(1) நெற்பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்தப்படும் உள்ளீடுகளின் அளவு
(2) கிராமசேவகர் பிரிவொன்றின் குடித்தொகை
(3) பல்பொருள் அங்காடி ஒன்றில் நுகர்வோரின் நடத்தை
(4) அலுவலக உதவியாளர்களின் கல்வி மட்டங்கள்
(5) குடித்தனங்களின் வருமான மூலங்கள் (……)

**5.** புவியியல் தகவல் முறைமையில் நேரடியாகப் பயன்படுத்தக்கூடிய தரவுச் சோடி
(1) செய்மதிப் படிமங்கள், வருடி (scanned) செய்யப்பட்ட தரவுகள் ஆகியனவாகும்.
(2) இலக்கமுறைத் (digital) தரவுகள், அச்சுப் பதிக்கப்பட்ட தரவுகள் ஆகியனவாகும்.
(3) வருடி செய்யப்பட்ட தரவுகள், இலக்கமுறைத் தரவுகள் ஆகியனவாகும்.
(4) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமைத் (GPS) தரவுகள், தொடர்ச்சியான தரவுகள் ஆகியனவாகும்.
(5) ஆள்கூறுகள், இலக்கமுறைத் தரவுகள் ஆகியனவாகும். (……)

**6.** இடவிளக்கப் படமொன்றில் எடுத்துக்காட்டப்படும் இரண்டு பௌதிக அம்சங்கள்,
(1) நிலவுயர்ச்சி, நீர்ப்பாசனம் என்பனவாகும்.
(2) பயிர்ச்செய்கை, நீர்ப்பாசனம் என்பனவாகும்.
(3) வடிகால், வீதி வலையமைப்பு என்பனவாகும்.
(4) இடவிளக்கவியல், வடிகால் என்பனவாகும்.
(5) நீர்ப்பாசனம், வீதி வலையமைப்பு என்பனவாகும். (……)

More Past Papers at
tamilguru.lk

**7.** இலக்கமுறைப் படங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கருவி,
(1) திசைகாட்டி ஆகும்.
(2) தியோடலைற்று ஆகும்.
(3) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையின் (GPS) உள்வாங்கி ஆகும்.
(4) வருடி (Scanner) ஆகும்.
(5) அளவு நாடா ஆகும். (……)

**8.** நகரமொன்றின் குடித்தொகைச் சேர்க்கையைச் சிறப்பாக எடுத்துக்காட்டக்கூடியது,
(1) இழைவரையமாகும்.
(2) பிரிக்கப்பட்ட வட்ட வரைபாகும் (pie graph).
(3) கோட்டு வரைபாகும்.
(4) புள்ளிப் படமாகும்.
(5) பிரிக்கை வரைபடமாகும். (……)

**9.** கோடுகளையும் சலாகைகளையும் (bars) ஒன்றிணைத்து தனியொரு வரைபில் எடுத்துக்காட்டக்கூடிய தரவு
(1) குடித்தொகை அடர்த்தி, பரம்பல் என்பனவாகும்.
(2) மழைவீழ்ச்சி, வெப்பநிலை என்பனவாகும்.
(3) நிலப்பயன்பாடு, குடித்தொகை என்பனவாகும்.
(4) இறக்குமதிகள், ஏற்றுமதிகள் என்பனவாகும்.
(5) குடிவரவு, குடியகல்வு என்பனவாகும். (……)

**10.** தரவுப் பரம்பலொன்றின் மாறுபாடுகளை வகுப்பு ஆயிடைகள் மூலம் எடுத்துக்காட்டும் படம்,
(1) இடகணியப் படமாகும். (2) இடவிளக்கப் படமாகும். (3) பாய்ச்சல் படமாகும்.
(4) புள்ளிப் படமாகும். (5) சமகணியப் படமாகும். (……)

**11.** பின்வருவனவற்றுள் முதலாம் ஒழுங்கு நிலவுருவங்கள் இரண்டினை எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) எரிமலைகள், மலைத்தொடர்கள்
(2) கண்டச் சாய்வுகள், பரிசைப் பகுதிகள்
(3) கண்டங்கள், சமுத்திரங்கள்
(4) மலைத்தொடர்கள், பரிசைப் பகுதிகள்
(5) கண்டங்கள், தீவுகள் (……)

[பக். 3 ஐப் பார்க்க

**12.** மூடிய தொகுதியொன்றுக்கான ஓர் உதாரணம்,
(1) ஞாயிற்றுத் தொகுதியாகும். (2) புவித் தொகுதியாகும்.
(3) அயன மழைக்காட்டுத் தொகுதியாகும். (4) ஆற்று வடிநிலமாகும்.
(5) புல்நிலச் சூழல் தொகுதியாகும். (……)

**13.** பின்வருவனவற்றுள் புவியின் மூடியினை, புவியின் மையப் பகுதியிலிருந்து பிரித்துக் காட்டும் கூற்றன்பேர்க் தொடர்ச்சியின்மை அமைந்திருக்கும் ஆழத்தினைச் சரியாகக் காட்டும் தெரிவு யாது?
(1) 1550 km (2) 1750 km (3) 2100 km (4) 2200 km (5) 2990 km (……)

**14.** சக்திக் கனிப்பொருளை எடுத்துக்காட்டும் தெரிவு,
(1) மொனசைற் ஆகும். (2) குறோமியம் ஆகும். (3) பெல்ஸ்பார் ஆகும்.
(4) மக்மற்ரைற் ஆகும். (5) லிமோனைற் ஆகும். (……)

**15.** உருமாறிய பாறை ஒன்றுக்கு உதாரணமாகக் காட்டப்படும் தெரிவு யாது?
(1) கருங்கல் (2) சுண்ணக்கல் (3) சிஸ்ட்
(4) படிகப்பார் (5) மணற்கல் (……)

**16.** விலகல் நகர்வுகளினால் உருவாக்கப்பட்ட நிலவுருவம் ஒன்றிற்கான ஓர் உதாரணம்,
(1) மத்திய - சமுத்திரத் தொடராகும். (2) இமய மலைத்தொடராகும்.
(3) மரியானா அகழியாகும். (4) ஹாவாய் தீவுகளாகும்.
(5) றொக்கி மலைத்தொடராகும். (……)

**17.** புவிநடுக்கங்களுள் பெரும்பாலானவை இடம்பெறும் புவியின் பிரதான பிரதேசம் எது?
(1) பசுபிக் - வளையப் பிரதேசம்
(2) மத்தியதரை - இமயமலைப் பிரதேசம்
(3) மத்திய - அத்திலாந்திக் சமுத்திரப் பிரதேசம்
(4) ஆபிரிக்கப் பிளவுப் பள்ளத்தாக்குப் பிரதேசம்
(5) தென் அமெரிக்கப் பிரதேசம் (……)

**18.** விசூவியஸ் எரிமலை அமைந்துள்ள நாடு எது?
(1) பிலிப்பைன்ஸ் (2) இந்தோனேசியா (3) யப்பான்
(4) இத்தாலி (5) மெக்சிக்கோ (……)

**19.** பின்வருவனவற்றுள் தலையீட்டு எரிமலை நிலவுருவம் ஒன்றுக்கான உதாரணம்,
(1) எரிமலைப்பெருவாய் ஆகும். (2) எரிமலைக்கூம்பு ஆகும்.
(3) லாவா மேட்டுநிலம் ஆகும். (4) குத்துத்தீப்பாறை ஆகும்.
(5) கூட்டுக்கூம்பு ஆகும். (……)

**20.** இலங்கையின் முதலாவது இடைப் பருவகால மழைவீழ்ச்சி இடம்பெறும் காலப்பகுதி
(1) மார்ச் - ஏப்ரல் ஆகும். (2) ஓகஸ்ட் - செப்ரெம்பர் ஆகும்.
(3) ஒக்டோபர் - நவம்பர் ஆகும். (4) ஏப்ரல் - மே ஆகும்.
(5) நவம்பர் - டிசம்பர் ஆகும். (……)

**21.** இலங்கையில் மிகக் கூடிய மழைவீழ்ச்சி பதிவாகும் அமைவிடம் யாது?
(1) யட்டியாந்தோட்டை (2) ஹட்டன் (3) வட்டவளை
(4) மாலிபொட (5) தலவாக்கலை (……)

**22.** பின்வருவனவற்றுள் பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றத்துக்கான மூன்று பிரதான மூலங்களை இறங்குவரிசை ஒழுங்கில் சரியாக எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) சக்தித் துறை, கைத்தொழில் துறை, காடழிப்பு
(2) சக்தித் துறை, போக்குவரத்துத் துறை, விவசாயத் துறை
(3) கைத்தொழில் துறை, காடழிப்பு, போக்குவரத்துத் துறை
(4) விவசாயத் துறை, போக்குவரத்துத் துறை, கைத்தொழில் துறை
(5) காடழிப்பு, விவசாயத் துறை, போக்குவரத்துத் துறை (……)

[பக். 4 ஐப் பார்க்க

**23.** குறிப்பிட்ட அமைவிடமொன்றின் காலநிலையைத் தீர்மானிப்பதற்கு எத்தனை வருட வானிலைத் தரவுகள் தேவை?
(1) 15 வருடங்கள் (2) 20 வருடங்கள் (3) 30 வருடங்கள்
(4) 40 வருடங்கள் (5) 50 வருடங்கள் (……)

**24.** பின்வருவனவற்றுள் அயன மழைக்காடுகள் அமைந்துள்ள பகுதிகளை எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) ஆசியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்கா, பசுபிக் சமுத்திர தீவுகள்
(2) அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்கா, மடகஸ்கார்
(3) ஆசியா, ஆபிரிக்கா, வட அமெரிக்கா, மத்திய அமெரிக்கா
(4) ஆசியா, தென் அமெரிக்கா, தென் ஐரோப்பா, பசுபிக் சமுத்திர தீவுகள்
(5) தென் ஆபிரிக்கா, சீனா, தென் அமெரிக்கா, பசுபிக் சமுத்திரத் தீவுகள் (……)

**25.** இலங்கையின் இரண்டாவது மிக நீளமான ஆறு,
(1) களு கங்கையாகும். (2) கலா ஓயாவாகும். (3) மல்வத்து ஓயாவாகும்.
(4) களனி கங்கையாகும். (5) வளவை கங்கையாகும். (……)

**26.** குடித்தொகையின் முதுமையடைதலுக்கான இரண்டு காரணிகளைக் கொண்டிருக்கும் சரியான தெரிவு யாது?
(1) ஆயுள் எதிர்பார்ப்புக் காலத்தின் அதிகரிப்பு, கருவளத்தின் அதிகரிப்பு
(2) ஆயுள் எதிர்பார்ப்புக் காலத்தின் வீழ்ச்சி, இறப்பு வீதங்களின் வீழ்ச்சி
(3) ஆயுள் எதிர்பார்ப்புக் காலத்தின் அதிகரிப்பு, கருவளத்தின் வீழ்ச்சி
(4) ஆயுள் எதிர்பார்ப்புக் காலத்தின் வீழ்ச்சி, விவாக வீதங்களின் வீழ்ச்சி
(5) ஆயுள் எதிர்பார்ப்புக் காலத்தின் அதிகரிப்பு, விவாக வீதங்களின் அதிகரிப்பு (……)

**27.** 'புளூ பனானா' (Blue Banana) என அழைக்கப்படும் நகரக் கைத்தொழில் இடைவழி (Corridor) விரிவடைந்து செல்வது,
(1) சிக்காக்கோவிலிருந்து பிற்ஸ்பேர்க் வரையாகும்.
(2) பொஸ்டனிலிருந்து வாஷிங்டன் வரையாகும்.
(3) வடமேற்கு இங்கிலாந்திலிருந்து ஜெனோவா வரையாகும்.
(4) டோக்கியோவிலிருந்து ஒசாக்கா வரையாகும்.
(5) கிளாஸ்கோவிலிருந்து புடாபெஸ்ட் வரையாகும். (……)

**28.** முதனிலைப் பொருளாதார நடவடிக்கைகள் இரண்டினைக் கொண்டிருக்கும் சரியான தெரிவு யாது?
(1) விவசாயம், தயாரிப்புக் கைத்தொழில்
(2) சுரங்கமறுத்தல், மீன்பிடிகள்
(3) சுரங்கமறுத்தல், போக்குவரத்து
(4) விவசாயம், வர்த்தகம்
(5) மீன்பிடிகள், தயாரிப்புக் கைத்தொழில் (……)

More Past Papers at
tamilguru.lk

**29.** பல்தேசியக் கம்பனி என்பது
(1) பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த மக்கட் பிரிவினரால் நடாத்தப்படுகின்றது.
(2) வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் கைத்தொழில்களுக்கு நிதி வழங்குவதற்கு உருவாக்கப்பட்டது.
(3) தாய்நாட்டிலுள்ள கம்பனிகளுக்கு மேலதிகமாக, ஏனைய நாடுகளிலும் கிளைகளைக் கொண்டிருக்கின்றது.
(4) உலக வர்த்தக நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.
(5) உயர் பெறுமதிமிக்க பரந்த வீச்சுக் கொண்ட பொருட்களை உற்பத்தி செய்கின்றது. (……)

**30.** பயிர்ச்செய்கையின் கீழுள்ள நிலப்பகுதியின் அளவில் ஏற்படும் விரிவாக்கம் கட்டுப்படுத்தப்படுவதற்கு காரணம்,
(1) பெரும்பாலான வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் விவசாயத் தொழில்நுட்பம் பற்றாக்குறையாக உள்ளது.
(2) உலகில் பயிரிடக்கூடிய நிலங்களில் பெரும்பாலானவை ஏற்கனவே பயிர்ச்செய்கையின் கீழ் காணப்படுகின்றன.
(3) விவசாயிகளாக இருப்பதற்கு குறைந்த அளவிலான இளவயது மக்களே விரும்புகின்றனர்.
(4) அரச நிலங்களை ஒதுக்கீடு செய்வதற்கு அரசாங்கங்களின் விருப்பமின்மை காணப்படுகின்றது.
(5) விவசாய நிலங்களின் விரிவாக்கத்தினைப் பூகோள வெப்பமடைதல் கட்டுப்படுத்துகின்றது. (……)

[பக். 5 ஐப் பார்க்க

**31.** நகரப் படிநிலை அமைப்பில் மிகச் சிறியதும், சிக்கல் தன்மை குறைந்ததுமான குடியிருப்பு வகை யாது?
(1) பண்ணை வீடு (2) கிராமம் (3) பட்டினம்
(4) சிற்றூர் (5) பெருநகரம் (......)

**32.** பின்வருவனவற்றுள் குடித்தொகையின் நான்கு பண்புகளை எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) பிறப்புகள், இறப்புகள், இடப்பெயர்வு, வளர்ச்சி
(2) பிறப்புகள், இறப்புகள், குடிவரவு, குடியகல்வு
(3) கருவளம், இறப்பு, சேர்க்கை, இடப்பெயர்வு
(4) பருமன், பரம்பல், சேர்க்கை, வளர்ச்சி
(5) பருமன், கட்டமைப்பு, இயற்கை அதிகரிப்பு, இடப்பெயர்வு (......)

**33.** ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை பின்வரும் எந்த நகர வகைக்குள் உள்ளடக்கப்படுகின்றது?
(1) கலாச்சாரம் (2) நிர்வாகம் (3) வாழிடம்
(4) கைத்தொழில் (5) வர்த்தகம் (......)

**34.** தென் ஆசியாவில் நகரக் குடித்தொகையை அதிக சதவீதத்தில் கொண்டிருக்கும் நாடு,
(1) இந்தியா (2) இலங்கை (3) பங்களாதேஷ்
(4) மாலைதீவுகள் (5) பாகிஸ்தான் (......)

**35.** பின்வரும் தெரிவுகளுள் எது குடித்தொகை ஒன்றின் பால் விகிதத்தினை விவரிக்கின்றது?
(1) குடித்தொகையில் தலா 100 பெண்களுக்கு ஆண்களின் எண்ணிக்கை.
(2) குடித்தொகையில் தலா 100 ஆண்களுக்கு பெண்களின் எண்ணிக்கை.
(3) குடித்தொகையில் தலா 1000 பெண்களுக்கு ஆண்களின் எண்ணிக்கை.
(4) குடித்தொகையில் தலா 1000 ஆண்களுக்கு பெண்களின் எண்ணிக்கை.
(5) குடித்தொகையில் தலா 10 பெண்களுக்கு ஆண்களின் எண்ணிக்கை. (......)

**36.** பின்வருவனவற்றுள் இலங்கையின் காரீய உற்பத்தியில் காணப்படும் முனைப்பான அம்சத்தினைச் சரியாக எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) பெரும்பாலான உற்பத்தி உள்ளூர்க் கைத்தொழில்களினால் பயன்படுத்தப்படுகிறது.
(2) உற்பத்திச் செலவு வீழ்ச்சியடைந்து வருகின்றது.
(3) 99% மான உற்பத்தி ஏற்றுமதி செய்யப்படுகிறது.
(4) உற்பத்திச் செயன்முறையானது பெரிதும் இயந்திரமயமாக்கப்பட்டுள்ளது.
(5) உற்பத்தியில் தனியார் துறை ஈடுபடுவதில்லை. (......)

**37.** குடியிருப்பு ஒன்றின் மிக முக்கியமான கூறு யாது?
(1) சமூகம் (2) இருப்பிடம் (3) வலையமைப்பு
(4) மனிதன் (5) சூழல் (......)

**38.** இலங்கையில், 1987 இல் இருந்து நகரப் பகுதியாக **சேர்த்துக்கொள்ளப்படாமல்** இருந்த உள்ளூராட்சி அலகு,
(1) பட்டின சபையாகும். (2) பிரதேச வருமான அலுவலகப் பிரிவாகும்.
(3) மாநகர சபையாகும். (4) உதவி அரசாங்க அதிபர் பிரிவாகும்.
(5) நகர சபையாகும். (......)

**39.** இலங்கையின் ஈர வலயக் குடித்தொகையின் பண்புகளைச் சரியாக விவரிக்கும் விடை யாது?
(1) குடித்தொகைப் பருமன் பெரிதாகவும் குடித்தொகையின் வளர்ச்சி வீதம் உயர்வாகவும் உள்ளது.
(2) குடித்தொகைப் பருமன் சிறிதாகவும் குடித்தொகையின் வளர்ச்சி வீதம் குறைவாகவும் உள்ளது.
(3) குடித்தொகைப் பருமன் பெரிதாகவும் குடித்தொகை வளர்ச்சி வீதம் குறைவாகவும் உள்ளது.
(4) குடித்தொகை அடர்த்தி பெரிதாகவும் குடித்தொகை வளர்ச்சி வீதம் உயர்வாகவும் உள்ளது.
(5) குடித்தொகை அடர்த்தி குறைவாகவும் குடித்தொகை வளர்ச்சி வீதம் குறைவாகவும் உள்ளது. (......)

**40.** பிரித்தெடுக்கும் கைத்தொழிலானது சுரங்கமறுத்தல் என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
(1) இரும்பு மற்றும் உருக்குக் கைத்தொழிலுக்கான மூலப் பொருட்களை இது வழங்குகின்றது.
(2) கனிப்பொருட்களை அகழ்ந்தெடுக்கும் ஒரு கைத்தொழிலாக இருக்கின்றது.
(3) கனிப்பொருட்கள் அதிகளவில் காணப்படும் பகுதிகளில் உள்ள கைத்தொழிலாக உள்ளது.
(4) அகழ்ந்தெடுக்கப்பட்ட கனிப்பொருட்களில் பெரும்பாலான கனிப்பொருட்கள் துப்பரவு செய்யப்படுகின்றன.
(5) அகழ்ந்தெடுக்கப்பட்ட கனிப்பொருட்களில் பெரும்பாலானவை முதன்நிலைப் பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. (......)

* *

[பக். 6 ஐப் பார்க்க

| | | |
|---|---|---|
| භූගෝල විද්‍යාව | I | |
| புவியியல் | I | 22 T I |
| Geography | I | |

பகுதி II – வினா இலக்கம் 1. (iii)

[பக். 7 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

22 T I

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

※ **பகுதி III** இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து விடையளித்தல் வேண்டும்.

※ இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக இலங்கையின் 1 : 50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதியும் உலகப் புறவுருவப்படமும் வரைபுத்தாள்கள் **இரண்டும்** வழங்கப்படும்.

## பகுதி II

● இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1 : 50, 000 அளவுத்திட்டத்திலமைந்த தம்புள்ளை இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அதில் சமவுயரக்கோடுகளின் இடைவெளி 20 மீற்றரினால் காட்டப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**குறிப்பு :**
※ **படத்தின் மேல் விடைகள் எழுதப்படக்கூடாது.**
※ விடைத்தாளில் தொடர்புடைய **வினா இலக்கத்தினையும்** அதன் **உப பிரிவு இலக்கத்தினையும்** தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
※ உமது விடைத்தாளுடன் படத்தினை இணைக்க **வேண்டாம்.**

**1.** (i) **AB** மற்றும் **CD** கோடுகளினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள நிலவுருவ அம்சங்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) நாற்பக்கல் **E** மற்றும் **F** ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ள வடிகால் அம்சத்தினையும் நிலவுருவ அம்சத்தினையும் முறையே பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iii) **G** மற்றும் **H** இனை இணைக்கும் கோடு நெடுகிலும் உள்ள பகுதிக்கான குறுக்குப் பக்கப் பார்வை (cross - section) ஒன்றினை வரைக. (இதற்காக 6 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ள வரைபுத்தாளைப் பயன்படுத்துக.) (03 புள்ளிகள்)

(iv) வரையப்பட்ட குறுக்குப் பக்கப் பார்வையில் காட்டப்படும் பிரதேசத்தின் இடவிளக்கவியலுக்கும் நிலப் பயன்பாட்டுக்கும் இடையிலான தொடர்பினைச் சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

(v) படப் பகுதியில் காணப்படும் இடவிளக்கவியலுக்கும் போக்குவரத்து வலையமைப்புக்கும் இடையிலான தொடர்பினை ஆராய்க. (05 புள்ளிகள்)

(vi) நாற்பக்கல் **J** இல் காணப்படும் பகுதியின் நிலப்பயன்பாட்டு இயல்பினை விவரிக்குக. (05 புள்ளிகள்)

**2.** தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில், வழமையான குறியீடுகளையும் நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் **குறித்துப் பெயரிடுக.**

(i) றொக்கி மலைத்தொடர்
(ii) குவாங்கோ ஆறு
(iii) கலகாரிப் பாலைவனம்
(iv) ஏரல் கடல்
(v) சைப்பிரஸ் தீவு
(vi) மலாக்கா நீரிணை
(vii) கிறீன்விச் நெடுங்கோடு
(viii) சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவகம் அமைந்துள்ள நகரம்
(ix) வளி மாசுபடுதலினால் மோசமாகப் பாதிக்கப்படும் சீன நகரம்
(x) லத்தீன் அமெரிக்காவில் இரும்புத் தாதினை உற்பத்தி செய்யும் முன்னணி நாடு (10 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

இங்கே வெட்டி அகற்றவும்

## பகுதி III

**3.** (i) தரவுக்கும் தகவலுக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) முதன்நிலை மற்றும் இரண்டாம்நிலைத் தரவுகளுக்கு இடையிலான வேறுபாட்டினை ஆராய்க. (04 புள்ளிகள்)

(iii) முதன்நிலைத் தரவுகளைச் சேகரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் **நான்கு** முறைகளை இனங்காண்க. (04 புள்ளிகள்)

(iv) முதன்நிலைத் தரவுகளைச் சேகரிக்கும்பொழுது எதிர்நோக்கப்படும் **இரண்டு** பிரச்சினைகளைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

**4.** (i) படம் (map) என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) பெரிய அளவுத்திட்டப் படத்துக்கும் சிறிய அளவுத்திட்டப் படத்துக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) இடவிளக்கப் படத்தின் **இரண்டு** பயன்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கருப்பொருட் படங்களின் நன்மைகள் **இரண்டினையும்** தீமைகள் **இரண்டினையும்** சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

**5.** 2009 மற்றும் 2012 இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு, கைத்தொழில் துறையினால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பானது **அட்டவணை 1** இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 1 :** 2009 மற்றும் 2012 இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழில் துறையின் பங்களிப்பு (மில்லியன் ரூபா)

| | **கைத்தொழில்துறை** | **2009** | **2012** |
|---|---|---|---|
| 1 | சுரங்கமறுத்தலும் கல்லுடைத்தலும் | 60 079 | 84 672 |
| 2 | தயாரிப்பு | 458 660 | 520 938 |
| 3 | மின்வலு, எரிவாயு மற்றும் நீர் | 63 567 | 72 634 |
| 4 | கட்டடவாக்கம் | 177 912 | 247 091 |

**மூலம்** : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை. (2012)

(i) 2012 இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழில் துறையின் பங்களிப்பினை எடுத்துக்காட்டுவதற்கு பிரிக்கப்பட்ட வட்டவரைபு (pie graph) ஒன்றினை வரைக. (இதற்காக தனியானதொரு வரைபுத்தாளைப் பெற்றுக்கொள்க.) (05 புள்ளிகள்)

(ii) நீர் வரைந்த வரைபின் நன்மைகள் **இரண்டினையும்** தீமைகள் **இரண்டினையும்** விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) **அட்டவணை 1** இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி, இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கைத்தொழில் துறையின் பங்களிப்பில் காணப்படும் **இரண்டு** முனைப்பான அம்சங்களைச் சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

(iv) **அட்டவணை 1** இல் தரப்பட்டுள்ள தரவுகளை எடுத்துக்காட்டுவதற்குப் பயன்படுத்தக்கூடிய வேறொரு படவரைகலையியல் முறையினை முன்வைத்து அதன் பொருத்தப்பாட்டிற்கான காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக. (03 புள்ளிகள்)

**6.** (i) நவீன படவரைகலையியல் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) புவியியல் தகவல் முறைமையில் பயன்படுத்தப்படும் உள்ளீட்டுச் சாதனங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையின் (Global Positioning System) படவரைகலையியல் பயன்பாடுகள் **இரண்டினை** விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) நவீன படவரைகலையியல் நுட்பமுறைகளின் நன்மைகள் **மூன்றினைச்** சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

* * *

14022

AL/2019/22/T-II(NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

භූගෝල විද්‍යාව II
புவியியல் II
Geography II

22 T II

29.08.2019 / 1300 – 1610

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

✳ ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I - பௌதிகப் புவியியல்

**1.** (i) அகவிசைகள் மற்றும் புறவிசைகள் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) கற்கோளத்தில் அமுக்க விசைகளினால் உருவாக்கப்படும் **மூன்று** வகையான மடிப்புக்களைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) கற்கோளத்தில் இழுவிசை நகர்வுகளினால் உருவாக்கப்படும் **மூன்று** வகையான குறைகளைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) உயர் அகலக்கோட்டுப் பிரதேசங்களில் இடம்பெறும் பிரதான புறவிசையொன்றினால் உருவாக்கப்படும் **மூன்று** நிலவுருவங்களைப் பொருத்தமான வரைபடங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

**2.** (i) ஆற்றுப் பள்ளத்தாக்கொன்றில் அரித்தலினைப் பாதிக்கும் **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) ஆற்றுப் பள்ளத்தாக்கொன்றில் இடம்பெறும் அரித்தலின் **மூன்று** முறைகளைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) ஆற்றுப் பள்ளத்தாக்கொன்றின் மேற்பகுதியில் காணப்படும் **மூன்று** நிலவுருவங்களைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) ஆற்றுப் பள்ளத்தாக்கொன்றின் கீழ்ப் பகுதியில் படிதலினால் உருவாக்கப்படும் நிலவுருவங்கள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

**3.** (i) காலநிலை மாற்றம் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) காலநிலை மாற்றத்துக்குப் பங்களிக்கும் இயற்கைக் காரணிகள் **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) பூகோளக் காலநிலை மாற்றமானது மானிட நடவடிக்கைகளை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை **மூன்று** உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் சாதகமற்ற தாக்கங்களை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய **மூன்று** நடவடிக்கைகளை விவரிக்குக. (06 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

4. (i) நீரியல் வட்டத்தில் காணப்படும் நீரின் வடிவங்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) பூகோள நீர் வளங்களின் தரத்தினைப் பாதிக்கின்ற **மூன்று** பிரதான காரணிகளைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையின் நீர் வளங்களைத் தீர்மானிக்கின்ற பிரதான பௌதிகக் காரணிகள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) தீவின் நீர் வளங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் **மூன்று** நடவடிக்கைகளைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி II - மானிடப் புவியியல்

5. **அட்டவணை 1: சர்வதேச இடப்பெயர்வு 1990-2017**

| வருடம் | சர்வதேச ரீதியாக இடம்பெயர்ந்தோரின் மொத்த எண்ணிக்கை (மில்லியன்) | அபிவிருத்தி அடைந்த நாடுகளில் (மில்லியன்) | இடம்பெயர்ந்தோரின் மொத்த எண்ணிக்கையின் சதவீதமாக (%) | அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் (மில்லியன்) | இடம்பெயர்ந்தோரின் மொத்த எண்ணிக்கையின் சதவீதமாக (%) |
|---|---|---|---|---|---|
| 1990 | 152.5 | 82.4 | 54.0 | 70.1 | 46.0 |
| 1995 | 160.7 | 92.3 | 57.4 | 68.4 | 42.6 |
| 2000 | 172.6 | 103.4 | 59.9 | 69.2 | 40.1 |
| 2005 | 190.5 | 116.3 | 61.0 | 74.2 | 39.0 |
| 2010 | 220.0 | 130.7 | 59.4 | 89.3 | 40.6 |
| 2015 | 247.6 | 140.3 | 56.7 | 107.3 | 43.3 |
| 2017 | 257.7 | 146.0 | 56.7 | 111.7 | 43.3 |

மூலம்: United Nations, Department of Economic and Social Affairs, Population Division, Trends in International Migrant Stock, 2017

(i) **அட்டவணை 1** இல் தரப்பட்டுள்ள சர்வதேச இடப்பெயர்வில் இருந்து இனங்காணக்கூடிய **நான்கு** முனைப்பான அம்சங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) அபிவிருத்தியடைந்த நாடுகளை நோக்கி இடம்பெயர்வதற்கு மக்களைத் தூண்டும் காரணிகள் **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இடப்பெயர்வின் காரணமாக, சென்றடையும் இடங்களில் ஏற்படும் சமூக-பொருளாதார மாற்றங்கள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் குடித்தொகைப் பரம்பலை, இடப்பெயர்வு எவ்வாறு பாதிக்கின்றது என்பதனை **மூன்று** உதாரணங்களுடன் ஆராய்க. (06 புள்ளிகள்)

6. (i) இலங்கையின் பிழைப்பூதிய (subsistence) விவசாயத்தில் காணப்படும் **நான்கு** முனைப்பான அம்சங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) இலங்கையில் பின்பற்றப்பட்டுவரும் விவசாயத் தொழில்நுட்பங்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) மேலே (ii) (அ) இல் பெயரிட்ட தொழில்நுட்பங்களுள் ஏதாவது **ஒன்றினைத்** தெரிவுசெய்து, அது எவ்வாறு இலங்கையின் விவசாய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்துள்ளதென்பதை **இரண்டு** உதாரணங்களுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கையில் விவசாய சந்தைப்படுத்தலில் காணப்படும் **மூன்று** பண்புகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) உலக விவசாயம் தற்பொழுது எதிர்நோக்கும் பிரதான சவால்கள் **மூன்றினைப்** பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

7. (i) கைத்தொழில் அமைவிடத்தினை நிர்ணயிக்கும் **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் உம்மால் குறிப்பிடப்பட்ட காரணிகளுள் ஏதாவது **ஒன்றினைத்** தெரிவுசெய்து, கைத்தொழில்களின் அமைவிடத்தில் எத்தகைய செல்வாக்கினை அது கொண்டிருந்ததென்பதை **மூன்று** உதாரணங்களுடன் விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) கைத்தொழில் அமைவிடத்தினை நிர்ணயிக்கும் காரணிகளில் ஏற்பட்டுவரும் அண்மைக்காலப் போக்குகள் **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு ஆடைக் கைத்தொழில் எவ்வாறு பங்களித்துள்ளது என்பதை **மூன்று** உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

8. (i) 'பூகோளமயமாக்கம்' என்பதை வரைவிலக்கணம் செய்க. (02 புள்ளிகள்)


(ii) பூகோளமயமாக்கல் செயன்முறையை விரைவுபடுத்துகின்ற **மூன்று** காரணிகளைப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்குப் பூகோளமயமாக்கம் எவ்வாறு பங்களிப்புச் செய்துள்ளதென்பதை **மூன்று** உதாரணங்களுடன் விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) பூகோளமயமாக்கத்தினால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உருவாக்கப்பட்டுள்ள **மூன்று** பிரச்சினைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

* * *

More Past Papers at
tamilguru.lk




SCALE 1 : 50,000

සමෝච්ච රේඛා අන්තරය මීටර 20
சமவுயரக்கோட்டு இடைவெளி 20 மீற்றர்
Contour Interval 20 metres

14022

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

NEW

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 2

භූගෝල විද්‍යාව I / புவியியல் I / Geography I

II කොටස / பகுதி II / PART II

22 STE I

විභාග අංකය / சுட்டெண் / Index No ............................

